ஒரு பேராசிரியரும் அங்கே இருக்கிறார்: அறுவை சிகிச்சை நிபுணரும் அங்கே இருக்கிறார். எல்லாவிதமான வசதிகளும் அங்கே இருக்கின்றன. விபத்துக்களிலே பாதிக்கப்பட்ட வர்களைப் பராமரிக்கவும் உடனடியாக சிகிச்சை அளிக்கவும் அவசர சிகிச்சைக் கூடமும் இருக்கிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தென் மண்டலப் பகுதியினுடைய தலை நகரான மதுரையில் எர்ஸ்கின் ஆஸ்பத்திரிதான் மிகப் பெரிய ஆஸ்பத்திரி. அப்படிப்பட்ட ஆஸ்பத்திரியில் கரானரி யூனிட் சென்ற ஆண்டுதான் துவக்கப்பட்டிருப்பதாக அமைச்ச ரவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த கரானரி யூனிட்டில் என்னென்ன கருவிகள் தற்பொழுது இருக்கின்றன? மற்ற பெரிய ஆஸ்பத்திரிகளில் புதிய நவீன கருவிகள் இருப்பதைப் போல் இங்கும் அமைக்க இந்த அரசுக்கு ஏதேனும் உத்தேசம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10–50]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டுதான் துவக்கப்பட்டுள்ளது என்று நான் சொல்லவில்லை, செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்றுதான் சொன்னேன். அந்த மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனையில் சிகிச்சைப் பெறுகின்ற இடத்தில் மானிட்டர்ஸ், டைவர்சிபிலேட்டர்ஸ், பேஸ்மேக்கர்ஸ் என்ற உபகரணங்கள், இருதய நோய், நரம்புத் தளர்ச்சி நோய்கள் சம்பந்தமாக இருக்கின்றன என்பதை தெரிவித்துக் கொள் கிறேன்.

*வினா எண். 457— திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை அரசாங்க மருத்துவமனையில் இருதய நோய் சிகிச்சை பிரிவு நல்ல முறையில் அமைக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் என்றால் அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

1979 மார்ச் 17]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்தரராஜன் :

(அ) மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையில் இருதய நோய் சிகிச்சைப் பிரிவு (Cordiology Department) இன்னும் அமைக்கப்படவில்லை.

(ஆ) மருத்துவக் கல்வி இயக்குநரிடமிருந்து தகுந்த செயற்குறிப்புகள் கோரப்பட்டுள்ளன.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை, திருச்சி, கோவை ஆகிய ஜில்லாக்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது, ஆனால் மதுரைக்கு மட்டும் சுகாதார மருத்துவத்திற்கு நிதி ஒதுக்கப்படவில்லை. மற்றும் வெளி நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது அதிகப்படுத்தும் உத்தேசம் உள்ளதா ? நரம்புத் தளர்ச்சி, உட்பிரிவு விரிவு படுத்த திட்டம் உள்ளதா ? இருதய நோய் சம்பந்தமான கருவிகள் அமைக்கப்படுமா ? அங்குள்ள நோயாளிகளுக்குப் படுக்கை வசதிகள் இல்லாமல் நோயாளிகள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். அவர்களுக்கு கூடுதலாக 500 படுக்கைகள் அமைக்க அரசு முன் வருமா என்றும், இராமநாதபுரம், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களுக்கும் மத்தியமாக இருக்க மதுரையில் இருதய நோய் சிகிச்சைப்பிரிவு அமைக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்தரராஜன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் இருதய நோய் சிகிச்சைப்பிரிவு அமைக்க உத்தேசம் இருக்கிறதா என்றுதான் கேட்டிருக்கிறார்கள். வெளிநோயாளிகள் எவ்வளவு பேர் வந்தாலும் அவர்கள் எல்லோருக்கும் அங்கே சிகிச்சை அளிக்கப்படுகிறது. அங்கே 9,500 படுக்கைகள் ஏற்கெனவே இருக்கிறது. புது படுக்கைள் ஏற் படுத்தும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, இருதய நோய் சிகிச்சைப் பிரிவுக்கான செயற்குறிப்பு அரசுக்கு வரப்பட்டிருக்கிறதா ? அப்படி வரவில்லை என்று சொன்னால் அதைப் பெறுவதற்கான நடவடிக்கை என்ன எடுத்து வருகிறது? நல்ல முறையில் அந்த பிரிவு சிகிச்சை தருவதற்காக ஒதுக்கப் பட்டிருக்கிற தொகை எவ்வளவு - அது எப்பொழுது அமைக்கப் படவிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்தரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனையில், இருதய நோய் சிகிச்சைப் பிரிவு எதுவும் இதுவரை

ஏற்படுத்தவில்லை. அப்படி ஏற்படுத்துவதற்கான செயற் குறிப்பு மருத்துவ கல்வித்துறை இயக்குநரிடம் கோரப் பட்டு பெறப்பட்டது. இதய நோய் கிசிச்சைப் பிரிவு பகுதி மற்றும் உபகரணங்களையும் வாங்குவதற்காக 1,31,512 ரூபாய் தொடர் செலவாகவும், ரூபாய் 9.5 லட்சம் தொடரா ச் செலவாகவும் மருத்துவக் கல்வி இயக்குநர் குறிப்பில் இருக்கிறது. ஆனால், இந்தக் கருத்தை ஆய்வு செய்து பார்த்த தற்கு பின்னர் நிதித் துறையின் கருத்தை வைத்து 1980–81-ம் ஆண்டில் 2-வது நிதி திட்டமாக செய்யலாம் என்று பரிசீலனையில் இருக்கிறது.

காலநடை ஆய்வாளர் பயிற்சி.

* வினா எண். 458— திரு. கே. ஜே. சுப்பிரமணியன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை ஆய்வாளர் பயிற்சி வருகிற 1978–79ஆம் ஆண்டு துவக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேருக்கு பயிற்சி அளிக்கப் படும் ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :

(அ) துவக்கப்படாது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. ஜே. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, கால்நடை ஆய்வாளர் பயிற்சிக்கான குறைந்த பட்ச கல்வித் தகுதி என்ன ? அப்படி எத்தனை பேர் வேலையில் இருக் கிறார்கள் என்று அமைச்சர் அறிவிப்பாரா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை ஆய்வாளர் பயிற்சிக்கு தேர்ந் தெடுக்கப்பட குறைந்த பட்ச தகுதி எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும். இந்த பயிற்சியின காலம் 11 மாதம். இது சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டது. தமிழ்நாட்டில் 3,024 கால்நடை ஆய் வாளர்கள் உள்ளனர். இதில் 1,071 கால்நடை ஆய்வாளர் நிலை 1-ம், 1953 கால்நடை ஆய்வாளர் நிலை 2-ம் அடங்கும்.